ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2454/35 - 2025 සැප්තැම්බර් මස 17 වැනි බදාදා - 2025.09.17**

2454/35 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல்மாகாண மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களைக் கையளித்தல்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (இ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் மேல்மாகாண ஆளுநரான ஹனீப் யூசுப் ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மேல்மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு உதவியளிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள பின்வரும்அட்டவணையில் உள்ளடங்கிய நிரல் 1 இல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நேரொத்த நிரல் 11 இல் குறிப்பிடப்படும் பதவி வகிப்பவர்களுக்கு அதன் அட்டவணையின் நிரல் III இன் கீழ் குறித்துரைத்து விவரிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை 2025.08.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் கையளிக்கப்படுகிறது என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

**ஹனீப் யூசுப்,**<br>
ஆளுநர்,<br>
மேல்மாகாணம்.

மேல் மாகாணசபைக் கட்டிடத்தில் அமைந்துள்ள,<br>
மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்,<br>
பத்தரமுல்லை,<br>
2025 செத்தெம்பர் 12.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| ஹெவாபொன் சேகாகே சிந்தக புபுது குசும் ஸ்ரீ பொன்சேகா | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையர் (திணைக்களம்) | மேல்மாகாண மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் இல. 02(3),4, (4(2) தவிர) 5, 6, 7, 8, 33, 43(அ), 43(ஆ), 44, 45, 46, 47, 50, 52, 53, 54, (54(2)தவிர ) 58(2), 59, 67, 68, 69, 74, 76 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவாளருக்கு உரித்தான தத்துவங்கள் மற்றும் 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் விதிக்கோவையின் இல. 4, 11, 15, 16(II), 19, 22(II), 27, 32, 37, 39, 40, 41, 42, 49, 52, 53 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவாளருக்கு உரித்தான தத்துவங்கள். |

EOG 09 - 0166

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.